**ஒருவருக்கொருவர் அவயங்களாயிருக்கிறோம்**

**வாசிக்க**: **ரோமர்** 12:1-8 **அநேகராகிய நாமும் கிறிஸ்துவுக்குள் அவயங்களாயிருக்கிறோம்**.

நாம் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயும் ஒருவருக்கொருவர் அவயங்களாயும் இருக்கிறோம். சரீரம் "ஒரே" அவயவமாயிராமல் அநேக அவயங்களாயிருக்கிறது.

இயேசு கிறிஸ்து சரீரமாகவும் நாம் அவருடைய அவயங்களாயிருக்கிறோம். சரீரத்திலே பிரிவினையுண்டாயிராமல் அவயங்கள் ஒன்றைக்குறித்து ஒன்று கவலையாயிருக்கும்படிக்கு தேவன் கனத்தில் குறைவுள்ளதற்கு அதிகக் கனத்தைக் கொடுத்து சரீரத்தை அமைத்திருக்கிறார்.

ஆதலால் ஒரு அவயவம் பாடுபட்டால் எல்லா அவயங்களும் கூட பாடுபடும். ஒரு அவயம் மகிமைப்பட்டால் எல்லா அவயங்களும் கூட சந்தோஷப்படும். எனவே கிறிஸ்துவுக்குள் அவயவங்களாயிருக்கிற நாம் ஒவ்வொருவரும் ஒருவருக்கொருவர் உதவி செய்ய வேண்டும். ஒவ்வொரு அவயவமும் ஒவ்வொன்றைச் சார்ந்தே இருக்கிறது. அப்படியே நீங்களும் ஒருவரை ஒருவர் சார்ந்து வாழ வேண்டும்.

ராபர்ட் என்பவர் தன் தொழிலில் நிறைவான ஆசீர்வாதம் பெற்றிருந்த நபராய் இருந்தார். அவர் அவ்விதம் ஆசீர்வதிக்கப்பட்டிருந்ததின் இரகசியம் இதுதான். அவரது 20-வது வயதில் அவருடைய தகப்பனார் இறந்து போனார். வயது முதிர்ந்த அவருடைய தாயார் கை, கால்கள் செயல் இழந்து படுத்த படுக்கையானாள், உண்ணுவது, குளிப்பது எல்லாம் அந்தப் படுக்கையில் தான்.

தன் உலகத் தொழிலையும் செய்துவிட்டு சற்றேனும் முகங்கோணாமல் தன் தாயாருக்குச் செய்ய வேண்டிய சகல உதவிகளையும் செய்து வந்தார். தன் மரண நேரம் வந்தபோது அந்தத் தாய் மகனை அழைத்து இவ்வாறு கூறினார்களாம். "அருமை மகனே, ஒரு தாய் தன் குழந்தையைக் கவனிப்பது போல நீ என்னைப் பராமரித்து வந்தாய். உனக்குக் கொடுக்க என்னிடம் ஒன்றுமில்லை. ஆனால் தேவன் உன்னை அதிகமாக ஆசீர்வதிப்பார்!" என்று அவர்கள் ஆசீர்வதித்தார்கள். ஆம் அவள் கூறின ஆசீர்வாதம் அப்படியே பலித்தது.

ராபர்ட் தன் தாயை தனது அவயங்கள் போல் பராமரித்ததால் தாயாரும் சந்தோஷப்பட்டு, தேவனும் சந்தோஷப்பட்டு அவனை ஆசீர்வதித்தார். அதேப்போல நீங்களும் ஒருவருக்கொருவர் அவயங்களாயிருந்து ஒருவர் மேல் ஒருவர் கருசனையாக இருங்கள். ஒருவரை ஒருவர் சார்ந்து வாழுங்கள்.

**கேள்விகள்**:

1. நாம் யாருடைய அவயங்கள்?

2. சரீரத்திலே பிரிவினையுண்டானால் என்ன நடக்கும்?

3. எப்படி வாழ வேண்டும்?